කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology
TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அறிக்கை இல : 01 WW/L/23/10/15/01

நிறம் : ஆம்பர்

**பலத்த மழைவீழ்ச்சி மற்றும் மின்னல் தாக்கம் தொடர்பான ஆலோசனை**

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்,
2023 ஒக்டோபர் 17ஆம் திகதியிலிருந்து 2023 ஒக்டோபர் 20ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில்
2023 ஒக்டோபர் 15ஆம் திகதி பிற்பகல் 05.00 மணியில் வெளியிடப்பட்டது.

**மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களுக்கு:**

**தயவுசெய்து அவதானமாக இருக்கவும்!**

**வெப்பவலயங்களுக்கு இடையிலான ஒடுங்கு வலயம் (வட அரைக் கோளத்திலிருந்தும் தென் அரைக் கோளத்திலிருந்தும் வீசும் காற்று ஒடுங்கும் இடம்) நாட்டின் வானிலையில் தாக்கம் செலுத்துகின்றது. இதன் தாக்கம் காரணமாக நாட்டில் தற்போது நிலவும் மழை நிலைமை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

அதற்கிணங்க, தென்மேற்கு பகுதி உட்பட நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் ஒக்டோபர் 17ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதி வரை அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் **100 மி.மீ க்கும் அதிகமான** அதிக செறிவான மழைவீழ்ச்சிக்கான (குறுகிய நேரத்தில் பாரிய மழைவீழ்ச்சி) சாத்தியம் காணப்படுகின்றது.

**பலத்த மழைவீழ்ச்சி நிலையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:**

- மலைப்பகுதிகளிலும் (குறிப்பாக மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில்) ஆற்றங்கரைகளில் தாழ்வான பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் இவ்விடயத்தில் அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.
- மலைப்பகுதிகளில் வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகளும் இவ்விடயத்தில் அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

**மின்னல் தாக்கத்தின் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:**

- உள்ளகப் பகுதிகளில் புகலிடம் தேடுங்கள். மரங்களின் கீழ் ஒருபோதும் நிற்க வேண்டாம்.
- இடி முழக்கத்தின் போது நெல்வயல்கள், தேயிலைத் தோட்டங்கள், திறந்த நீர்நிலைகள் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- இடி முழக்கத்தின் போது கம்பித்தொடர்புள்ள தொலைபேசி மற்றும் மின்னிணைப்பிலுள்ள மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- துவிச்சக்கர வண்டிகள், உழவியந்திரங்கள், படகுகள் போன்ற திறந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- விழக்கூடிய மற்றும் விழுந்த மரங்கள், மின்கம்பிகள் குறித்து அவதானமாக இருக்கவும்.

**அவசர உதவிகளுக்கு உங்கள் பிரதேச அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்.**

**இவ்விடயம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் பிந்திய எதிர்வுகூறல்கள் மற்றும் எச்சரிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.**